රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.

இணைந்த சேவைகள் பிரிவு
சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.

COMBINED SERVICES DIVISION
*Independence Square, Colombo 07, Sri Lanka*

| දුරකථනය<br>தொலைபேசி:**(94) 011- 2694560**<br>Telephone | ෆැක්ස්<br>தொலைநகல்:**(94) 011- 2692254**<br>Fax | ඊ-මේල්<br>மின்னஞ்சல்:**dgcs@pubad.gov.lk**<br>E-mail | වෙබ් අඩවිය<br>இணைத்தளம்:**www.pubad.gov.lk**<br>Web Site |
|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | R/DO/PER.APP/2020 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி:<br>Date | 2020.04.20 |

<u>**இணைந்த சேவையைச் சேர்ந்த புதிதாக நியமனம் பெற்ற உத்தியோகத்தர்கள் கடமையைப் பொறுப்பேற்றல்**</u>

i <u>**இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 தரம் III மற்றும் வகுப்பு 2 தரம் II - நியமனத் திகதி 2020.03.16**</u>

ii <u>**அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III (2018 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்) -**</u>
<u>**நியமனத்தைப் பொறுப்பேற்பதற்கான இறுதித் திகதி 2020.03.16**</u>

2020.03.16 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் விதத்தில் என்னால் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 தரம் III மற்றும் வகுப்பு 2 தரம் II இற்கு நியமனம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களும் 2020.01.01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு நியமனம் வழங்கப்பட்ட பெரும்பாலான உத்தியோகத்தர்களும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையின் காரணமாக இது வரையில் கடமைகளைப் பொறுப்பேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் அதிகமான மாவட்டங்களில் ஊடரங்குச் சட்ட ஏற்பாடுகள் தளர்த்தப்பட்ட போதிலும் சனாதிபதி செயலாளரின் 2020.04.18 ஆம் திகதிய PS/GPA/சுற்றறிக்கை/20/2020 ஆம் இலக்கச் சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க மட்டுப்படுத்தப்பட்ட ஒரு தொகை உத்தியோகத்தர்களை மாத்திரமே அரசாங்க நிறுவனங்களுக்கு அழைக்க முடியும்.

02. அதனால் நிறுவனத் தலைவர்களிடமிருந்து விசேட அழைப்புக்கள் கிடைக்காவிட்டால் மேலே குறிப்பிட்ட கடமையைப் பொறுப்பேற்காத உத்தியோகத்தர்கள் இச்சந்தர்ப்பத்தில் கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டாம் என்று பணிவுடன் அறியத் தருகிறேன். அத்துடன் கடமைகளைப் பொறுப்பேற்பதற்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காலத்தை 2020.05.04 ஆம் திகதி வரை நீடிப்பதாகவும் அறியத் தருகின்றேன்.

03. அதற்கிணங்க, தற்போது அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட ஆள் நடமாட்ட மட்டுப்பாடுகளுக்கும் அரசாங்க நிறுவனங்களின் அத்தியவசிய சேவைகளை கொண்டு நடாத்துவதற்காக மாத்திரம் ஏற்புடையதாக விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் தடங்கல் ஏற்படும் விதத்தில் சேவை நிலையத் திருத்தக் கோரிக்கைகளை அல்லது இது தொடர்பான வேறு எழுத்து மூலமான கோரிக்கைகளை எடுத்துக் கொண்டு இந்த அமைச்சுக்கு வருவதைத் தவிர்ந்து கொள்ளுமாறும் அறியத் தருகின்றேன்.

04. புதிதாக நியமனம் பெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கோரிக்கைக்கு இணங்க சேவை நிலையங்கள் திருத்தப்பட்டதுடன் அவ் உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியல் 2020.03.17ஆந் திகதிஇவ்அமைச்சின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டது. அவர்களில் இதுவரையில் திருத்தப்பட்ட கடிதங்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போன உத்தியோகத்தர்களின் கடிதங்களை 2020.05.04 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் விதத்தில் தபால் மூலம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். ஏற்கனவே நியமனக் கடிதம் மூலம் சேவையில் **இணைக்கப்பட்ட சேவை நிலையங்களில் கடமைகளைப் பொறுப்பேற்ற எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு**சேவை நிலையத் திருத்தக் கடிதம் வழங்கப்பட்டிருப்பின், அந்தக் கடிதம்செல்லுபடியற்றதாகும் என்பதுடன் அந்த உத்தியோகத்தர்கள் பொதுஇடமாற்றபொதுஇடமாற்றமுறைமையைப் பின்பற்றி தம் திணைக்களத் தலைவர்களின் ஊடாக இடமாற்றத்துக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

எஸ். ஆலோகபண்டார

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்